கள்ளக்குறிச்சியில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல பள்ளி மாணவியர் விடுதியும் இயங்கி வருகின்றன. கூகையூர், எஸ். ஒகையூர், நாகலூர் ஆகிய இடங்களில் புதிதாக மாணவ/மாணவியர் விடுதி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.*

[**குறிப்பு :** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. அறிவிப்புகள்

(அ) கைப்பேசிகளை புறாக் கூண்டு அறையில் வைத்துவிட்டு உறுப்பினர்கள் அவைக்குள் வருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கைப்பேசிகளை அவர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள புறாக் கூண்டு அறையில் வைத்துவிட்டு வரவும். இன்று கைப்பேசியின் ஒலி கேட்டது. அவை இனி பறிமுதல் செய்யப்படும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

3. தி.மு.க. உறுப்பினர்களைப் பேரவைப் பணிகளினின்றும் தற்காலிகமாக நீக்கி வைத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள், உட்காருங்கள். எல்லோரும் சேர்ந்து நின்று கொண்டு பேசினால் என்ன கேட்க முடியும்? உட்காருங்கள், யாராவது ஒருவர் பேசினால் என்ன பேசுகிறீர்கள் என்று கேட்கலாம். இப்படி அனைவரும் எழுந்து நின்று பேசினால், என்ன கேட்க முடியும். அனைவரும் உட்காருங்கள். யாராவது ஒருவர் பேசினால் கேட்கலாம். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று பேசினர்.)